## ஆளுநர் விவகாரத்தில்

# சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடிவு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி

சென்னை, ஜூலை 2-

அவசர கதியில் ஆளுநர் ஆர். என்.ரவி எடுத்துள்ள முடிவை, அரசு முற்றிலுமாக நிராகரிக்கிறது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, தி.மு.க. எம்.பி. வில்சன் ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:

அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை நீக்கம் செய்திருப்பதாக நேற்று அவசர கதியிலே ஒரு அறிவிப்பினை வெளியிட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக, அவ்வாறு அமைச்சரவையிலிருந்து ஒருவரை நீக்குவதற்கு ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும், அதனை நாங்கள் சட்டப்படி சந்திப்போம் என்று அவர்கள் செய்தியாளர்களிடத்தில் தெரிவித்ததற்குப் பிறகு நள்ளிரவிலே ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் ஆளுநரை அழைத்து நீங்கள் அவசர கதியிலே செயல்பட்டிருக்கிறீர்கள். Attorney General உடைய கருத்தைக்கூட கேட்காமல் இவ்வாறு செய்திருக்கிறீர்கள் என்று அவர், அவரை இடித்துரைத்ததற்குப் பிறகு அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை நீக்கம் செய்திருக்கக்கூடிய தன்னுடைய அந்த கடிதத்தை தான் நிறுத்தி வைப்பதாக முதலமைச்சர் அவர்களுக்கு அவர் கடிதம் எழுதியிருக்கிறார்.

### ஆளுநர் நடவடிக்கை செல்லத்தக்கதல்ல!

இந்த விஷயத்தில் ஆளுநர் அவர்கள் அதற்கு முன்பாக முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய விஷயங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் மிக விளக்கமான தெளிவுரைகளை அளித்து இன்றைக்கு ஆளுநருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி இருக்கிறார்கள். அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் விவகாரத்தில், அவரை பதவி நீக்கம் செய்யக்கூடிய எந்த அதிகாரமும் சட்டப்படி ஆளுநருக்கு கிடையவே கிடையாது, சட்டப்படியும் கிடையாது, அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலும் ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லவே இல்லை என்பதையும் ஒரு அமைச்சரை நியமிப்பதோ அல்லது அந்த அமைச்சரை நீக்குவதோ உரிய அந்த தனிப்பட்ட அதிகாரம் (Prerogative) அந்த விருப்புரிமை முதலமைச்சருக்கு மட்டுமே உரித்தானது என்றும், ஆளுநருக்கு எந்தவிதமான அதிகாரம் இல்லை என்பதையும் மீண்டும் தெளிவுறுத்தி முதலமைச்சர் அவர்கள் ஆளுநருக்கு தெளிவுபட தெரிவித்திருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் இன்றைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆளுநருக்கு தெளிவான விளக்கங்களை அளித்து அவருடைய நிலை சட்டப்படி அரசியலமைப்பின் கூறுகளின்படி ஆளுநர் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் செல்லத் தக்கதல்ல என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பொதுவாக, ஆளுநர் இந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பாக, எந்தவிதமான ஒரு application of mind என்று சொல்லக்கூடிய அவர் அதை யோசித்தோ அல்லது அவர் உரிய அறிவுரைகளையோ பெற்றுக் கொள்ளாமல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவராகவே ஒரு முடிவுக்கு வந்து அவசர கதியில் அவர் அறிவித்திருப்பதை, முற்றிலுமாக இந்த அரசு நிராகரிக்கிறது. இது சம்பந்தமாக, ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதையும் மீண்டும் மீண்டும் தமிழ்நாடு அரசின் வாயிலாக நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.

உச்சநீதிமன்றத்தினுடைய முழு ஐந்து நீதிபதிகள் அடங்கியிருக்கக் கூடிய Full Constitutional Bench ஏற்கனவே இது குறித்து தெளிவான தீர்ப்பு வழங்கியிருக்கிறது. எனவே இது முழுக்க முழுக்க நம்முடைய முதலமைச்சருடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டதேயொழிய, முதலமைச்சருடைய ஒரு அட்வைஸ் அவருடைய அறிவுரைகள் இல்லாமல், ஆளுநர் தாமாகவே முன்வந்து அவருடைய விருப்புரிமையின் அடிப்படையில் ஒரு அமைச்சரை நீக்குவதோ அல்லது நியமிக்கக்கூடிய அந்த அதிகாரத்தையோ அவர் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது திட்டவட்டமாகத் தெரிந்ததற்குப் பிறகும், வேண்டுமென்றே ஆளுநர் அவர்கள் இந்த செயலில் ஈடுபட்டு அது இன்றைக்கு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களால் அதுசுட்டிக்காட்டப்பட்டு இன்றைக்கு அவர் நிறுத்தி வைத்திருக்கிறார். எனவே, தமிழ்நாடு அரசைப் பொறுத்தமட்டில் ஆளுநருடைய இந்த நடவடிக்கை என்பது முற்றிலும் நாங்கள் அந்த கடிதத்தை disregard செய்கிறோம். அதற்கான விஷயத்தை முதலமைச்சர் அவர்களும் தெளிவாக அனுப்பியிருக்கிறார்.

**கேள்வி:** சட்டரீதியான நடவடிக்கை எடுப்போம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார், அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்?

**நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு:** எந்த சட்ட நடவடிக்கை நமக்கு தேவையாக இருக்கிறதோ, அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், இது அரசியலமைப்புச் சட்டம் நமக்கு கொடுக்கக்கூடிய ஒரு உரிமை. ஆளுநர் அவர்கள் அந்த உரிமையை மீறியிருக்கிறார்கள். அது மீறி வருகின்ற போது, தேவைப்பட்டால் we will explore all legal options available to us.

**கேள்வி:** ஏற்கனவே முதலமைச்சர் தரப்பில் ஆளுநருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறதா?

**நிதியமைச்சரின் பதில்:** இன்று அனுப்பப்படுகிறது. மிக விரைவில் ஆளுநர் மாளிகைக்கு செல்லும்.

**கேள்வி:** தமிழ்நாடு அரசுக்கும், ஆளுநருக்கும் தொடர்ந்து பிரச்சனை வந்து கொண்டிருக்கின்றது, எப்போதுதான் முற்றுப்புள்ளி?

**நிதியமைச்சரின் பதில்:** ஆளுநர் அவர்கள் மீண்டும் மீண்டும் இல்லாத பூனையை இருட்டு வீட்டிற்குள் தேடுவதைப்போல ஒரு பிரச்சினையை அவர் உருவாக்கிக் கொண்டே வந்துகொண்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் எதையும் சட்டரீதியாக நாங்கள் எந்த ஒரு விசாரணையை எதிர்கொள்வதற்கும் எப்போதும் தயக்கம் காட்டியதில்லை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சட்டரீதியாக நாங்கள் போராடி தான் வெற்றிகளை நாங்கள் பெற்று வந்திருக்கிறோம். இதனுடைய வரலாற்றை நீங்கள் எடுத்துப் பார்த்தால், சர்க்காரியா கமிஷன் காலத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது இத்தகைய குற்றச்சாட்டுகளை போகிற போக்கில் சொல்லிவிட்டு இப்படி எல்லாம் சொல்லுகிறார்கள், சொல்லப்படுகிறது என்று specific ஆக எந்தக் குற்றச்சாட்டு அன்றைக்கு கூட வரவில்லை. எல்லாம் சொல்லப்படுகிறது, நம்பப்படுகிறது என்கின்ற வகையில் தான் அந்தக் குற்றச்சாட்டுகளெல்லாம் அந்தக் காலத்திலும் சொல்லி, ஆதாரம் என்று கேட்டபோது அப்போதே நழுவிச் சென்றுவிட்ட காலம் எல்லாம் உண்டு.

அதைப்போல 2ஜி விவகாரத்திலும், நீதிபதியே சொன்னார், நானும் இந்த கோர்ட் திறந்ததிலிருந்து உட்கார்ந்து இருக்கிறேன், ஏதாவது ஒரு ஆதாரத்தை எடுத்துக் கொண்டு யாராவது ஒருவர் வருவார் என்று பார்க்கிறோம், இன்றைக்கு வரை வரவில்லை என்று அந்த நீதிபதியே சொல்லக்கூடிய அளவிற்குதான் இருந்தது. அதனால் திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மலை இலக்கானால் யார் வேண்டுமானாலும் அம்பு எய்தலாம் என்று சொல்வதைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தைப் பற்றி போகிற போக்கில் புழுதிவாரி தூற்றக்கூடிய செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

### அ.தி.மு.க.வினர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள்!

எங்களைப் பொறுத்தமட்டில் செந்தில் பாலாஜி அவர்களுடைய விஷயத்தில் நீங்கள், நியாயமான விசாரணை நடத்துவதில் எதுவும் சொல்லவில்லை. செந்தில் பாலாஜி அவர்களே அதைத்தான் சொல்லியிருக்கிறார், ED அல்லது எந்த விசாரணை அமைப்புகளோ விசாரணை நடத்துவதில் எந்தவிதமாக பிரச்சனையும் கிடையாது. ஆனால் அ.தி.மு.க. தரப்பில் தாக்கீதுகளென்றால், இன்றைக்கு பேட்டியில் கூட சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தரப்பில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் மீதே பல்வேறு ஊழல் வழக்குகளில் விசாரணைகள் இன்றைக்கு நடத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் வீட்டில் எல்லா இடத்திலும் நாங்கள் ரெய்டு செய்திருக்கிறோம். அதில் மேற்கொண்டு ஒவ்வொரு முறையும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இப்போது செந்தில் பாலாஜி அவர்களை மட்டும் தனிமைப்படுத்தி அவரை மட்டும் ஒரு குற்றச்சாட்டில் சிக்க வைத்து செய்ய வேண்டிய அவசியம் என்ன என்பதை நாங்கள் இங்கே கேட்கிறோம். இதில் எதிர்க்கட்சியாக இருக்கக்கூடியவர்கள் மட்டும் கிடையாது, ஆளுநரிலிருந்து மற்ற அத்தனை பேரும் சேர்ந்து இதில் ஏன் இவ்வளவு தூரத்திற்கு அவர்கள் இதில் துடியாக துடிக்கிறார்கள் என்பதும் எனக்கு தெரியவில்லை.

ஒருவர் குற்றம் சாட்டப்பட்டு விட்டதினாலே, அவருக்கு தகுதி இழப்பு நிச்சயமாக வந்துவிடாது. அவருக்கு இன்னும் Conviction இல்லாதபோது இன்னும் charges கூட frame செய்யாத ஒரு நிலையில் இருக்கும் வழக்கில் அவரை நீங்கள் தகுதி நீக்கம் செய்கிறேன் என்று அவரை நீக்கம் செய்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை நான் சொல்கிறேன்.

### குற்றச்சாட்டிலும் ஆட்சியில் இருந்த ஜெயலலிதா!

முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் கூட முதலமைச்சராக இருந்த போது அவர் மீது இத்தகைய ஒரு விசாரணை வந்து அவர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்ட நிலையில்கூட, அவர்கள் தொடர்ச்சியாக அவர்கள் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்த அந்த சம்பவங்களையும் நான் இங்கே நினைவுகூற கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு விஷயங்கள் இருக்கின்றது. இன்றைக்கும் கூட, ஒன்றிய அமைச்சர்களாக இருக்கும் ஏராளமானோர் மீது வழக்குகள் இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது. அவர்கள், இன்றும் தொடர்ச்சியாக ஒன்றிய அமைச்சரவையில் கூட, அவர்கள் வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது, அவர்கள் பதவியில் இருக்கிறார்கள். ஏறத்தாழ 11 வழக்குகள் அவர்கள் மீது இருக்கிறது. அவர்களையெல்லாம் நீக்கி விட்டார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இப்போது செந்தில் பாலாஜிக்கு மட்டும் எந்தவிதமான ஒரு விசாரணைகள் நடந்து அதற்குப் பிறகு வழக்கு நடைபெற்று அவர்களுக்கு தண்டனை என்று ஒன்று இல்லாத அளவில், அவசரம் அவசரமாக அவர் மீது மட்டும் இத்தகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது என்ன என்ற கேள்வி வருகிறது. இந்த கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் வெறுமனே செந்தில் பாலாஜி அவர்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள முயல்வது என்பது முற்றிலுமாக அரசியல் உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கிறது.

**கேள்வி :** நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும்போது அதிமுக அமைச்சர்களை நீக்கவேண்டும் என்று கவர்னருக்கு மனு கொடுத்துள்ளீர்களா?

**நிதியமைச்சரின் பதில்:** இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் கவர்னரே தன்னுடைய எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை திரும்பப் பெற்றுக்கொள்கிறார் என்று சொன்னால், அந்த நடவடிக்கை எந்த அளவுக்கு validity இல்லாமல் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். This is not legally tenable constitutionally it is invalid. இந்த வேறுபாடு என்ன என்பதை தான் எடுத்த நடவடிக்கையை திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

**கேள்வி :** வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது அமைச்சராக தொடர்வதினால் investigation பாதிக்கப்படுமா?

**மூத்த வழக்கறிஞர் வில்சன் பதில் :** செந்தில் பாலாஜி அவர்கள் வெறும் இலாகா இல்லாத அமைச்சராக தொடர்கிறார். அவருக்கு எந்தப் பொறுப்பும் கொடுக்கப்படவில்லை. அதனால் அவரை எந்த investigationலும் குறுக்கிடவேண்டிய அவசியம் கிடையாது. ஒன்றிய அரசின் அமைச்சரவையில் பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் மீது வழக்குகள் நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பொறுப்போடு உள்ள அமைச்சர்கள் மீது வழக்குகள் நடைபெறும்போது இவர் இலாகா இல்லாத அமைச்சராக தொடர்கிறாரே தவிர இவரிடம் எந்தவித இலாகாவும் வழங்கப்படவில்லை. குற்றம் சாட்டப்பட்ட இலாகாவனது வேறு ஒரு இலாகா. அதனால் அவர் ஒத்துழைக்க தயார் என்று தெளிவாக சொல்லியிருக்கிறார்.

**நிதியமைச்சரின் பதில்:** செந்தில் பாலாஜி அவர்கள் தற்போது judicial custodyயில் இருக்கிறார். ஏற்கனவே ஒருவர் judicial custodyயில் இருக்கும்போது எப்படி அந்த விசாராணையை தடைசெய்ய முடியும்? அவர் வெளியில் இல்லையே. ஏற்கனவே, அவர் Judicial custodyயில் இருக்கிறார்.

**கேள்வி:** குற்றம் சாட்டப்படுபவர்கள் பாஜகவில் இணைந்தவுடன் புனிதர்களாக ஆகிவிட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளார். அது போன்றதொரு முயற்சி நடக்கிறது என்று நினைக்கிறீர்களா? கவர்னர் உத்தரவு போடுகிறார், மறுபடியும் நிறுத்தி வைக்கிறார்.

**நிதியமைச்சரின் பதில்:** திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாதிரியான விஷயங்களில் சட்டபூர்வமாக நாங்கள் சந்தித்து வந்திருக்கிறோம். அதனால் எங்களுக்கு எந்தவிதமான ஒரு நெருக்கடியை இயக்கத்திற்கு கொடுத்துவிட முடியாது. இது ஆலமரம் போன்ற ஒரு ஜனநாயக இயக்கம். அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு, கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்டு, இன்றைக்கு தளபதி அவர்களால் தன்மானத்தோடு வீறுநடையோடு நடக்கக்கூடிய இந்த இயக்கம். அதனால், அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் நாங்கள் சந்திப்போம்.

### ஆளுநர் மீது வழக்கு தொடரப்படுமா?

**கேள்வி :** தொடர்ந்து ஆளுநரிடமிருந்து issue வந்துகொண்டே இருக்கிறது. ஆளுநர் மீது வழக்கு தொடர முடியாது என்பதால் இந்த மாதிரி செய்கிறார்களா? இந்த ஆட்சி நடக்கும்போது ஆளுநர் மீது வழக்கு தொடர வாய்ப்பு இருக்கிறதா?

**நிதியமைச்சரின் பதில்:** எல்லாவற்றிற்கும் நாம் வழக்கு தொடருவது என்பது உடனடி தீர்வாக கொண்டு வரமுடியாது. ஒவ்வொரு விஷயங்கள் வருகின்றபோது, Legal options என்ன என்பதை ஒவ்வொரு முறையும் நாங்கள் மூத்த வழக்கறிஞரிடம், எது சரியாக இருக்கிறதோ, அந்த options தான் எடுக்க முடியும். எந்த ஆயுதத்தை எப்போது எடுக்க வேண்டும், நாங்கள் உரிய நேரத்தில் முடிவு செய்வோம்.

**கேள்வி :** ஏற்கனவே, தேநீர் விருந்தை புறக்கணித்ததைப் போல ஆளுநருடைய ஏதாவது புறக்கணிக்க ஏதாவது திட்டமிருக்கிறதா?

**நிதியமைச்சரின் பதில்:** இன்றைய தேதியில் ஆளுநருக்கு பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. இனி எப்படி நடந்து கொள்ளவேண்டும். இதை ஆரம்பித்து வைத்தது யார்? கடந்த ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கூட சொன்னேன். இதை ஆரம்பித்து வைத்தது ஆளுநர் அவர்கள். இதை அவர்தான் முடிவெடுக்க வேண்டும். நாங்கள் அனைவரும் கலந்துகொள்ளக் கூடிய நல்ல சூழ்நிலையை அவர்கள் தான் உருவாக்கவேண்டும்.

**கேள்வி :** ஏதாவது அனைத்துக் கட்சிக் கூட்டம் இருக்கிறதா?

நிதியமைச்சரின் பதில்: பல்வேறு வாய்ப்புகள் இதில் இருக்கிறது. என்னென்ன நேரத்தில் என்னென்ன வாய்ப்புகளை செய்யவேண்டுமோ அதை முதலமைச்சர் அவர்கள் உரிய வகையில் அவர்கள் முடிவு செய்வார்கள்.

### முதல்வர் ஆளுநருக்குரிய மரியாதையை அளிக்கிறார்!

**கேள்வி :** ஆளுநருடைய கடிதத்தில் interpret words, inflammatory letter ஒன்றை அனுப்பி இருக்கிறீர்கள் என்று சொல்லி முதலமைச்சர் அவர்கள் மீது ஒரு குற்றச்சாட்டு வைத்திருக்கிறார்.

நிதியமைச்சரின் பதில்: முதலமைச்சர் அவர்களை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அவருடைய அணுகுமுறை என்பது எப்போதுமே very pleasant and more courteous அதுதான் அவருடைய வார்த்தைகளும், அணுகுமுறைகளும் இருக்கும். அதனால் எந்த காலக்கட்டத்திலும், dignity of the office of the Governor எந்த அளவுக்கு அவருக்கு மரியாதை கொடுக்கவேண்டுமோ, அந்த அளவுக்கு முதலமைச்சர் அவர்கள் எப்போதும், எந்தக் காலக்கட்டத்திலும், அதில் ஒரு சிறிய மில்லி மீட்டரோ, மைக்ரோ மில்லி மீட்டர் கூட அதில் குறைத்துக் கொண்டதே இல்லை என்பதுதான்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியளித்தார்.





தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி, ஈராண்டே சாட்சி சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் போதகாட்டில்,பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில்,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் லயோலா ராஜசேகர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி,கழக அரசின் 2 ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில தீர்மானக்குழு உறுப்பினர் கீரை.எம்.எஸ்.விசுவநாதன், மாவட்ட அவைத் தலைவர் கே.மனோகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், பேரூராட்சி தலைவர் கு.கௌதமன், அறங்காவலர் குழுத்தலைவர் பி.ஜி.கௌதமன்,முன்னாள் ஒன்றிய செயலாளர் டாக்டர்.பிரபு ராஜசேகரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.6.2023) தலைமைச் செயலகத்தில், "ஆதனின் பொம்மை என்ற நாவலுக்கு பாலபுரஸ்கார் விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள எழுத்தாளர் கா. உதயசங்கர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பதிப்பாளர் மணிகண்டன் உள்ளார்.

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில்

# மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 2-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் 17 இடங்களில் 2023 ஜூலை 01ந் தேதி முதல் ஜூலை மாதம் 25ந்தேதி வரை முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலானவிளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகிறது.

நேற்று முன்தினம் (30.06.2023) சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்தொடக்க விழா நடைபெற்றது.இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலானவிளையாட்டுப் போட்டிகளைத்தொடங்கி வைத்தார்கள்.

முதலமைச்சர் கோப்பை 2023 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தொடக்க விழா 2023 ஜூன் மாதம் 30 ஆம் தேதி அன்று சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவில் 38 மாவட்டங்களை சேர்ந்தவீரர்வீராங்கனைகளின் அணி வகுப்பு நடைபெற்றது. ஒலிம்பிக் தடகள வீராங்கனை செல்வி.ரேவதி மற்றும் சர்வதேசவாலிபால்வீரர் வைஷ்ணவ் ஆகியோர் முதலமைச்சர் கோப்பைக்கான சுடரினை அமைச்சர் அவர்களிடம்வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முதலமைச்சர் கோப்பைக்கான சுடரினை ஏற்றி வைத்து போட்டிகளை தொடங்கி வைத்தார்.

மேலும் ஒலிம்பிக் வீராங்கனை செல்வி. சுபா தலைமையில்விளையாட்டு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப் பட்டது. விழாவில்கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச்செயலாளர், முனைவர்அதுல்ய மிஸ்ரா, வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. நன்றியுரை ஆற்றினார்.

இந்த விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - தயாநிதி மாறன் (மத்திய சென்னை), டாக்டர் கலாநிதி வீராசாமி (வடசென்னை), திருமதி த.தமிழச்சி தங்கபாண்டியன் (தென் சென்னை), சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் ப.தாயகம் கவி (வி.க.நகர்), எம்.கே. மோகன் (அண்ணாநகர்), த.வேலு (மயிலாப்பூர்), ஐட்ரீம் ஆர். மூர்த்தி (இராயபுரம்), ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா (விருகம்பாக்கம்), துணை மேயர் மு. மகேஷ்குமார் தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் டாக்டர். அசோக்சிகாமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குண்டாண்டார் கோவில் மத்திய ஒன்றியச் செயலாளர் குளவாய்ப்பட்டி சி. சண்முகம் சித்தப்பா எஸ்.ராஜ்குமார் தெத்துவாண்டார் மகன் ஆர்.பிரபாகரன் – சி.ஜோயலதா ஆகியோர் திருமணம் கிள்ளுக்கோட்டையில் நடைபெற்றது. புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர். இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர் க.மதியழகன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என். போஸ், புதுக்கோட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு.கலைஞர் கருணாநிதி, கண்ணன், சின்னராஜ் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு

### ஜூலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், 'செண்பகத் தமிழ் அரங்கு' எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கிய கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் 'அகவை முதிர்ந்த தமிழறிஞர்' எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கச் சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**